# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

ஸ்தாபன சுற்றறிக்கை கடித இல: 21/ 2017

இல: 20, வோட் பிளேஸ்,
கொழும்பு 07.

2017.12.21

பல்கலைக்கழக உபவேந்தர்கள்
வளாக அதிபர்கள்
நிறுவகப் பணிப்பாளர்கள்

**<u>2017- ஆளணி மீளாய்வு அறிக்கைகளுடன் பின்பற்றப்பட வேண்டிய அறிவுறுத்தல்கள்</u>**

2017.11.09 ஆந் திகதியன்று இடம்பெற்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 975 ஆவது கூட்டத்தொடரில், 2017 – ஆளணி மீளாய்வு அறிக்கைகளைக் கருத்திற் கொண்டு, எழுதுவினைஞர் மற்றும் சமமான, மேலும் முதனிலை மட்டத் தரங்களில் தற்போது உயர்கல்வி நிறுவனங்களில் சேவையாற்றிக் கொண்டிருக்கும் பணியாளர்களுக்குரிய ஆட்சேர்ப்பு வழிமுறைகளுக்கு ஏற்ப செயற்படுவதற்காக, கீழ்வரும் அறிவுறுத்தல்களை பின்பற்றுமாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1. முகாமைத்துவ உதவியாளர் பதவியின் தரநிலைப் பதவியுயர்வுகளைப் பூர்த்தி செய்யப்பட்டு எழுதுவினைஞர், கணினிப் பிரயோக உதவியாளர், தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளர் ஆகிய பதவிகளில் சேவையாற்றுகின்றவர்களை, முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்கு உள்வாங்கும் வரை, மேலே கூறப்பட்ட பதவிகளில் சேவையாற்றுபவர்கள் தற்போது நடைமுறையில் இருக்கும் ஆட்சேர்ப்பு வழிமுறைகள் / (பதவியுயர்வு முறைமைகள்) கடைபிடிக்கப்படும். இதே போன்று புத்தக வைப்பாளர், பண்டகப் பொறுப்பாளர், சிறாப்பர் (Shroff) ஆகிய பதவிகளில் பணியாற்றுபவர்கள் முறையே முகாமைத்துவ உதவியாளர் (புத்தக வைப்பாளர்), முகாமைத்துவ உதவியாளர் (பண்டகப் பொறுப்பாளர்), மற்றும் முகாமைத்துவ உதவியாளர் (சிறாப்பர்) என உள்வாங்கப்படும் வரை தற்போது நடைமுறையில் இருக்கும் ஆட்சேர்ப்பு வழிமுறைகள் / (பதவியுயர்வு முறைமைகள்) கடைபிடிக்கப்படும்.

2. தற்போது தொழிலாளர் தரத்தில் சேவையாற்றுபவர்கள், வேலை உதவியாளர் பதவிக்கு உள்வாங்கப்படும் வரை, தொழிலாளர் தரத்தில் சேவையாற்றுபவர்கள் மீது தற்போது நடைமுறையில் இருக்கும் ஆட்சேர்ப்பு வழிமுறைகள் / (பதவியுயர்வு முறைமைகள்) தொடர்ந்து கடைபிடிக்கப்படும்.

3. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன் அனுமதி இன்றி ஆட்சேர்ப்பு வழிமுறைகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் தகைமைகளில் திருத்தங்கள் செய்யக்கூடாது.

4. 2017- ஆளணி மீளாய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள "தரம் / வகுப்பு" பூர்த்தி செய்யப்பட்டு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அது பற்றிய அறிவுறுத்தல்கள் எதிர்காலத்தில் வெளியிடப்படும் வரை, அதனைக் கருத்திற் கொள்ள வேண்டாம்.

5. 2017 –ஆளணி மீளாய்வு அறிக்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பதவிகள் மற்றும் சம்பளக் குறியீடுகள், 2017 -ஆளணி மீளாய்வு அறிக்கைகளை வெளியிட்ட பின்னர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பணியாளர்களுக்காக மட்டுமே உரித்தாக்கப்படும்.

தயவு செய்து மேற்கூறப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டப்படுகிறீர்கள்.

பேராசிரியர். பி.எஸ்.எம் குணரத்ன
உப தலைவர்

பிரதிகள்:

1. செயலாளர், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
2. தலைவர் அலுவலகம், ப.மா.ஆ
3. உப தலைவர், ப.மா.ஆ
4. ப.மா.ஆ உறுப்பினர்கள்
5. செயலாளர், ப.மா.ஆ
6. பீடாதிபதிகள்
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்
8. கணக்காளர், ப.மா.ஆ
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள்
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள்- உயர்கல்வி நிறுவனம் / நிறுவகங்கள்
11. பிரதிப்பதிவாளர்கள், சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள், உதவிப் பதிவாளர்கள்-உயர்கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
12. பிரதி நிதிப் பொறுப்பாளர்கள் / சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள், உதவி நிதிப் பொறுப்பாளர்கள் - உயர்கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்- ப.மா.ஆ
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்கக் கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர்கல்வி நிறுவகங்களின் பிரதி உள்ளகக் கணக்காய்வாளர்கள் / சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்
16. சகல தொழிற்சங்கங்களினதும் செயலாளர்கள்
17. கணக்காய்வாளர் நாயகம்

ப.மா.ஆ./ எச்.ஆர் / 2/3/01

T/-